**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC NO. 200/2016 |
| Deposition of witness for | : | DW : 1 |
| Name | : | திரு. சந்திரகுமார் |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.12.2024**

1, 2 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. குவிமுச 315 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

## முதல் விசாரணை :

நான் இந்த வழக்கில் 1 ம் எதிரி. இந்த வழக்கின் புகார்தாரரான எனது மனைவி என் மீது கூறியுள்ள சாட்சியங்கள் அனைத்தையும் பொய் என்று மறுக்கிறேன். என் மனைவி 12.10.2009 ல் என்னோடு சேர்ந்து வாழவேண்டும் என்று உத்தரவிடக்கோரி மதுரை 3 வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருந்தேன். **அந்த மனு எதசாஆ.1.** அந்த மனுவின் படி வாதி என்னோடு சேர்ந்து வாழாததால் அந்த மனுவை வாபஸ் வாங்கிவிட்டு, என் மனைவி மீது HMOP. No.

132/2010, 08.04.2010 ல் தாக்கல் செய்தேன். **அந்த மனுவின் அலுவலக நகல் எதசாஆ.2.** இந்த மனுவை தாக்கல் செய்த தேதியில், அந்த மனுவில் என் மனைவி அவரது அக்கா ஜெயா வீட்டுக்காரருடன் தொடர்பில் இருந்து கர்ப்பமுற்றதாக கூறியிருந்தேன். அந்த மனுவில் 24.01.2012 ம் தேதியில் **எனக்கு சாதமாக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் எதசாஆ.3 ஆகும்.** அதில் பிறப்பிக்கப்பட்ட **தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் எதசாஆ.4 ஆகும்.** எனக்கு எதிராக 2010 ல் ஜீவானாம்சம் தொடர்பாக மனு MC.26/2010 தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுவில் மனுதாரர் ஆஜர் ஆகாததால் 06.01.2017 ம் தேதி **தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் எதசாஆ.5 ஆகும்**. இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் சட்ட விரோதமாக கைது செய்ததற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி 23.12.2009 ம் தேதி உயரதிகாரிகளுக்கு அனுப்பிய **புகார், இரசீது மற்றும் ஒப்புகை அட்டைகள் (5 வரிசை) எதசாஆ.6 ஆகும்.** குற்ற எண்.23/2009 வழக்கில் **காவல் அடைப்பு அறிக்கையின் சான்றிட்ட நகல் எதசாஆ.7 ஆகும்**. என் மனைவி, என் மீதும், என் 2 வது மனைவி, என் தம்பி, என் தம்பியின் மனைவி ஆகியோர் மீதும் கொடுத்த 19.08.2016 ம் தேதி **குற்ற எண்.69/2016 ல் முதல் தகவல் அறிக்கை நகல் எதசாஆ.8 ஆகும்.** எனக்கு சேர வேண்டிய 6 ¼ பவுன் மட்டும் வாதியிடம் உள்ளது. மேற்படி விபரத்தை நான் தாக்கல் செய்த HMOP மனுவிலும் சொல்லியுள்ளேன். அதை கொடுக்காமல்

இருப்பதற்காகத்தான் காவல்நிலையத்தில் நேரடியாக புகார் கொடுக்காமல், நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, என் மீது பொய்யாக வழக்கை தொடர்ந்து விட்டார். நான் எனது 6 ¼ பவுன் நகையை திரும்பி தரக்கோரி மேலூர் மகளிர் காவல்நிலையததில் புகார் கொடுத்தேன், அதன் பேரில் நடத்தப்பட்ட விசாரணையில் 1 மாதத்தில் நகையை திருப்பிக்கொடுக்க கூறினர். நகையை இன்றுவரை திருப்பிக் கொடுக்கவில்லை. நான் எதிரி மீது விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்து இருந்ததாலும், எனக்கு சேர வேண்டிய 6 ¼ பவுனை கேட்டு புகார் கொடுத்தாலும் தான் என் மீது இந்த பொய்யான வழக்கைத் தொடுத்துவிட்டார்கள்.

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN
Digitally signed by NAGARAJAN
Date: 2024.12.16 13:56:51 +0530

அமர்வு நீதிபதி,

மகளிர் நீதிமன்றம்,மதுரை